## தலைப்பு 225 – இலங்கை பொலிஸ்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 225 - இலங்கை பொலிஸின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸ் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஜூன் 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை பொலிஸின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை பொலிஸின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) மீண்டுவரும் செலவு

நிதிக் கூற்றுக்களுக்கு பொருத்தமான மீண்டுவரும் செலவு கணக்கீட்டின் போது பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விஜபி பாதுகாப்புப் பிரிவில் 2023 ஒக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களில் செலுத்தப்பட்ட ரூபா.564,990 மொத்த மேலதிக நேரக் கொடுப்பனவுகள் அந்த மாதங்களில் பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந் நடவடிக்கையானது கணக்காய்வு திகதிவரை ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினுள் சேர்க்கப்படவில்லை. இதன் விளைவாக, இந்த மீதியானது 2023 டிசம்பர் 31 இல் இலங்கை காவல்துறையின் கட்டுநிதி நிலுவைத் தொகையிலும் மேலதிக நேர மற்றும் விடுமுறைச் சம்பளச் செலவிலும் சேர்க்கப்படவில்லை. | 2024 மே இல் ரூபா.527,520 மற்றும் 2024 ஜனவரி இல் ரூபா.37,470 உம் கணக்கிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வதற்காக இந்த பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரசு கணக்கு வழிகாட்டுதல்களின்படி கணக்குகளை சரியாக தயாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

## (ஆ) அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2023 டிசம்பர் 31 திகதி இல் அரசு அதிகாரிகளின் முற்பணக் கட்டுப்பாட்டு கணக்குப்படி மீதி ரூபா.820,083,191 ஆகும். அதேதினத்தில் தனிநபர் வகைப்பாட்டு சுருக்க மீதி ரூபா.741,315,718 ஆகும். இதன்படி ரூபா.78,767,473 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அந்த வித்தியாசத்தை அடையாளம் கண்டு அதற்கான சீராக்கங்கள் செய்யப்படவில்லை. | இந்த வித்தியாசம் 2024 மார்ச் 31, நிலவரப்படி ரூபா.413,380 ஆல் குறைக்கப்பட்டு ரூபா.78,354,092 ஆக காட்டப்பட்டுள்ளது. | வேறுபாடுக்கான காரணம் அடையாளம் காணப்பட்டு அதற்கான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |
| (ii) நிதிக்கூற்றின் ஏசீஏ 5 - 2023 டிசம்பர் 31ஆம் திகதியன்று முற்பணக் கணக்குகள் கூற்றின் திணைக்களப் புத்தகங்களின்படி முற்பண மீதி ரூபா.820,083,191 ஆகவும், திறைசேரி ஏடுகளின்படி முற்பண கணக்கு மீதி ரூபா.819,868,392 ஆக இருந்ததுடன் வேறுபாடு ரூபா.214,799 ஆக இருந்தது. | ஏனைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட தவறான வரவு மற்றும் செலவுப் பதிவுகலே இந்த மாற்றத்திற்கான காரணங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கணக்கு பொழிப்பின் மூலம் இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வேறுபாடுக்கான காரணம் அடையாளம் காணப்பட்டு அதற்கான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |

## (இ) சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள்

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களுக்கான கணக்கீட்டில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏசீஏ-6 படிவத்தின்படி, நிதி அல்லாத சொத்துக்களின் இருப்பு ரூபா.140,765,756,448 ஆக இருந்தது, ஆனால் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் மதிப்பில் அருவச் சொத்துகளின் மதிப்பு உள்ளடக்கப்படாது ரூபா.140,638,451,745 ஆக நிதி நிலை அறிக்கையில் காட்டப்பட்டது. இரண்டு இருப்புகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு ரூபா.127,304,703 ஆகும். | சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் மட்டுமே நிதி அல்லாத சொத்துகளின் கீழ் காட்டப்படுவதால், இந்த அருவ சொத்துக்களின் மதிப்பு நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்படவில்லை. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் இந்த மதிப்பும் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் பெறுமதியின் கீழ் சேர்க்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | வேறுபாடு அடையாளம் காணப்பட்டு அதற்கான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |

(ஈ) **பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

பின்வரும் பதிவேடுகள் இலங்கை பொலிஸினால் பராமரிக்கப்படவில்லை என்பதும், சில பதிவேடுகள் முறைப் பிரகாரம் மற்றும் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(i) நிலையான சொத்துக்கள்** | | |
| 2023 நொவெம்பர் 30 திகதி 2023/05 இலக்கம் கொண்ட அரச கணக்கு வழிகாட்டலின் பந்தி 8.1 இற்கு இணங்க ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினுள் நிலையான சொத்துக்கள் மொடியுல் மூலம் பொலிஸ் பிரிவுகளின் அறிக்கைகளை ஒன்றினைத்து சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் சென்றிருக்கவில்லை. | பிரிவுகள் ஒன்றினைந்த சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்க காவல்துறையின் சொத்து முகாமைப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினுள் நிலையான சொத்துக்கள் மொடியுல் மூலம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணி வர வேண்டும். |
| **(ii) பொறுப்பு தொடர்பான பதிவேடுகள்**<br>நிதிப் பிரமாணம் 214 இன் படி செலுத்தவேண்டிய கணக்குகள் தொடர்பாக முறையாக தயாரிக்கப்பட்ட பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை. | 31.12.2023 இல் முடிவடையும் ஆண்டிற்கான இறுதி நிதிநிலை அறிக்கைகளில், இலங்கை காவல்துறையின் பல்வேறு பிரிவுகளால் அறிவிக்கப்பட்ட பொறுப்புகள் பட்டியல் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் படி முறையாக பொறுப்பு தொடர்பான பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 225-1-1-0-2505 – பெறுகைக்கான முன்னேற்பாடு மற்றும் 225-1-1-0-2509 - நாய்கள் வாங்குதல் ஆகிய இரண்டு செலவுப் விடயங்களுக்காக ரூபா. 60,000,000 ஒதுக்கப்பட்டு, அது தொடர்பான பணிகளுக்குப் பயன்படுத்தப்படாமல் வேறு செலவுப் விடயங்களுக்கு மாற்றப்பட்டது. | கட்டுமானத்திற்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் விரைவான அதிகரிப்பு, விலைகளை சமர்ப்பிக்காதது மற்றும் சட்ட சிக்கல்கள் காரணமாக 2505 செலவு விடயத்திலும் நாய்களை வாங்குவதற்கு விலைகள் அழைக்கப்பட்டாலும் சட்டத் தடைகள் தோன்றியதால், 2509 செலவு விடயத்திலும் | முறையான ஆய்வொன்றினூடாக ஏற்பாடுகள் ஒதுக்குவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒதுக்கப்பட்ட மிகுதித் தொகை ஏனைய செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டது. | |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில், நான்கு செலவு விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா.87,000,000 யில் ரூபா. 56,024,232 மீதமாக உள்ளதுடன் இது 49 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையாகக் காணப்பட்டது. | ஒப்பந்ததாரர்கள் மற்றும் பிற சட்ட விடயங்களால் விலை மனுக்களை சமர்ப்பிக்காதது, சந்தை விலை உயர்வு காரணமாக மென்பொருள் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பது, உரிய காலத்திற்குள் பணிகளை முடிக்காத காரணத்தால் ஒதுக்கீடுகள் ஒதுக்கீடுகள் மீதமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான ஆய்வொன்றினூடாக ஏற்பாடுகள் ஒதுக்குவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |
| (இ) | 2023 ஜனவரி 27 திகதியிட்ட பாதீட்டு சுற்றறிக்கை இல. 01/2023 இன் படி, 1001, 1204, 1404, 1502, 1601, 1602 மற்றும் 1603 தவிர அனைத்து மீண்டெழும் செலவினங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டில் 6 சதவீதம் சமமான ஒதுக்கீடுகளை குறைப்பதற்கு குறைந்த பட்சம் செயற்பட வேண்டும் என அனைத்து பிரதான கணக்கீட்டு அதிகாரிகளுக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் கூறப்பட்ட போதிலும், இலங்கை காவல்துறையின் 11 செலவின விடயங்கள் இவ்வாறு தொடர்பில் இது கையாளப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொலிஸாருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியானது சட்டம் ஒழுங்கை பேணுவதற்கு போதுமானதாக இல்லை என செயலாளரினால் பொது பாதுகாப்பு அமைச்சு ஊடாக தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்தல் விடுத்துள்ளது. | 2023 ஜனவரி 27, திகதியிட்ட பாதீட்டு சுற்றறிக்கை இல. 01/2023 அரசாங்க செலவினங்களை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துவது மேலும் தேவையற்ற செலவுகளை முடிந்தவரை குறைக்க முயற்சி செய்ய வேண்டும். |

**2.2 வைப்பு மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆண்டின் போது சார்க் தீவிரவாத மற்றும் போதைப் பொருள் குற்றங்களை அவதானிப்பு நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக இந்தியாவினால் வழங்கப்பட்டிருந்த ரூபா.45,837,000 இற்கான நன்கொடைத் தொகையில் மீதியாக காணப்படும் ரூபா.11,503,192 இற்கான தொகையொன்று குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தப்படாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான | சார்க் மாநாட்டில் முடிவு எடுக்கப்படும் வரை இந்தத் தொகையை நிறுத்தி வைக்க வேண்டும் | குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்கால வேலைத் திட்டமொன்றும் காணப்படவில்லை. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணத்தின் 571(2) ஆம் பிரிவின் படி காலாவதியான வைப்புத்தொகை நிதிப்பிரமாணத்தின் 570 ஆம் பிரிவின் படி அரசு வருவாயில் வரவு வைக்கப்படும். ரூபா.135,565,883 வைப்புத்தொகை அரச வருமானத்தில் வரவு வைக்கப்படாமல் 05 வைப்புக் கணக்குகளில் தக்கவைக்கப்பட்டது. | தற்போது, தொடர்புடைய வைப்புத்தொகைகளில் ஒரு பகுதி தீர்வு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள வைப்புத்தொகை அரசு வருவாயில் வரவு வைக்கப்படுவதாகவும், 30.04.2024 நிலவரப்படி மீதி ரூபா.79,470,169 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | காலாவதியான வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் 570 ஆம் பிரிவின் படி அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகளைச் செய்யத்தவறுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தண்டப் பணம் அறவீடு செய்வதை விரைவுபடுத்தல், அரச வருமானத்திற்கு சேகரிக்கப்படும் தண்டப்பண எண்ணிக்கையை அதிகரித்தல், பொது மக்களுக்கு தண்டப்பணம் செலுத்துவதை இலகுவாக்கல் ஆகிய குறிக்கோளுடன் மோட்டார் வாகன குற்றங்களுக்காக தண்டப் பணம் செலுத்தும் செய்முறை ஒன்று (Spot Fine Information System) நிறுவுவதற்காக 2014 ஆண்டு முதல் திட்டமிடப்பட்டு வந்திருந்த போதிலும் இது வரை குறிப்பிட்ட முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. | இந்த திட்டம் தற்போது அவசர திட்டமாக செயல்படுத்தப்பட்டு போக்குவரத்து அமைச்சகம், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் அடிப்படை செலவு தயாரிப்பு குழு என 02 குழுக்கள் பெயரிடப்பட்டு அதற்கான பணிகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. | பொதுமக்களுக்கு தண்டப் பணம் அறவீடு செய்வதை எளிதாக்கும் வகையில், போக்குவரத்து விதிமீறல்களுக்கான அபராதத் தொகையை தானாக செலுத்தும் உத்தேச முறையை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். |

## 3.2 விரும்பிய அளவிலான முடிவை அடையவில்லை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **அதிகாரக் குற்றங்களைப் புகாரளித்தல் மற்றும் தீர்ப்பது** | | |
| (i) | கடுமையான காயங்கள் மற்றும் மனித கொலைகளை ஏற்படுத்திய வன்முறைக் குற்றங்களை எடுத்துக் கொண்டால் 2018-2022 காலகட்டத்தில் முறையே 1431, 1373, 1356, 1375 மற்றும் 1482 ஆக இருந்நதுடன் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், அதன் அதிகபட்ச எண்ணிக்கை 2,030 ஆக இருந்தது.<br>2023 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் பதிவு செய்யப்பட்ட 488 மனித கொலைகளில் 52 கொலைகள் துப்பாக்கிச் சூடு மூலம் செய்யப்பட்டவை. தங்காலை, நுகேகொட, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் எல்பிட்டிய ஆகிய 05 பொலிஸ் பிரிவுகளில் முறையே 32, 27, 24, 24 மற்றும் 20 என அதிக எண்ணிக்கையிலான மனித கொலைகள் பதிவாகியுள்ளன.<br>“பொது பாதுகாப்பு மற்றும் அமைதியைப் பேணுதல்” மற்றும் “குற்றக் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு” ஆகியவை இலங்கை காவல்துறையின் 08 முக்கிய பணிகளில் 02 ஆக இருப்பதால், நாட்டில் வன்முறை குற்றங்கள் பதிவாகுவது தொடர்பாக போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டபடி, வன்முறைக் குற்றங்கள் மற்றும் கொலைகளை ஏற்படுத்தும் வன்முறைக் குற்றங்கள் அதிகம் பதிவாகியுள்ளன, வன்முறைக் குற்ற அறிக்கைகளை உருவாக்குவது தொடர்பாக, மாகாணத்தின் மூத்த துணை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் மற்றும் பிரிவுகளுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடுமையான காயங்கள் மற்றும் கொலைகளை ஏற்படுத்தும் வன்முறைக் குற்றங்களின் அறிக்கைகளின் அதிகரிப்பைக் குறைக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | கடந்த 6 ஆண்டுகளில் வீடுகளை உடைத்து கொள்ளையடித்தல் போன்ற வன்முறைக் குற்றங்கள் 2023 ஆம் ஆண்டிலேயே அதிக அளவில் பதிவாகியுள்ளன. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2023 ஆம் ஆண்டு வீடுகளை உடைத்து கொள்ளையடித்தல் போன்ற வன்முறைக் குற்றச் செயல்கள் 50 சதவீத வளர்ச்சியைக் காட்டியுள்ளன. 2018 இல் வீடுகளை | வீடுகளை உடைத்தல் மற்றும் கொள்ளையடித்தல் போன்ற குற்றங்களைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும், அந்தக் குற்றங்கள் தொடர்பான சாட்சியங்களை வெளிக்கொணர எடுக்கும் நேரத்தைப் பொறுத்து தீர்வுக்கான சதவீதங்கள் | வீடு புகுந்து கொள்ளையடித்தல் போன்ற வன்முறைக் குற்றங்களை விரைவாகத் தீர்க்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உடைத்து கொள்ளையடித்தல் தொடர்பான தீர்வு 60 சதவீதமாக இருந்தது, ஆனால் 2023 இல் 50 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2018 இல் திருட்டுத் தொடர்பான தீர்வு 75 சதவீதமாக இருந்தது, ஆனால் 2023 இல் 61 சதவீதமாகக் குறைந்துள்ளது. | குறைவாகவே காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | |
| **(ஆ) பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றங்கள் பற்றிய புகார்கள்**<br>2020-2023 காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றங்கள் முறையே 595, 568, 600 மற்றும் 759 ஆக இருந்தன. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றங்கள் 2023 ஆம் ஆண்டில் 27 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அதில், ஊழல்களின் எண்ணிக்கை 182இல் இருந்து 226 ஆகவும், படுகாயமடைந்தவர்களின் எண்ணிக்கை 154இல் இருந்து 221 ஆகவும் அதிகரித்துள்ளது. 74 முதல் 96 குத்து காயங்கள், கடுமையான பாலியல் துஷ்பிரயோக வழக்குகளின் எண்ணிக்கையும் 21இல் இருந்து 37 ஆக அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில், இந்தக் குற்றங்களுக்கு தீர்வு 99 சதவீத முன்னேற்றத்தைக் காட்டிய போதிலும், குற்ற அறிக்கையிடல் அதிகரித்துள்ளதால், இலங்கை காவல்துறையின் முக்கிய பணிகளில் ஒன்றான ”குற்றக் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு” பிரிவினால் போதிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடந்த ஒரு வருட காலப்பகுதியில் பதிவாகிய குற்றங்களுக்கு அந்த வருடத்திற்குள் தீர்வு காண முடியாவிட்டாலும், அந்த குற்றங்களை மிக குறுகிய காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குற்றங்களை கட்டுப்படுத்தவும், தடுக்கவும் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 திட்டம் செயல்படுத்துவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திருமணமான ஜுனியர் தர அதிகாரிகளுக்கான வீடுகள் கட்டுதல், வாகனத் தலைமையகத்தின் கட்டுமானம், 2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. வெலிகம பொலிஸ் நிலையத்தை | மேற்படி 08 வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் 55, 79, 50, 80, 72, 60, 80 மற்றும் 70 வீதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | திட்ட இலக்குகளை அடைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

நிர்மாணித்தல் மற்றும் கொள்ளுப்பிட்டி, குருதுவத்தை, திருக்கோவில், மல்லாவி மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையங்களின் பணிகளை நிறைவு செய்தல் தொடர்பான 08 தாமதமான திட்டங்களின் மொத்த மதிப்பீடு செலவு ரூபா.1,903.35 மில்லியன் மற்றும் 31.12.2022 அன்று மொத்த செலவு ரூபா.985.57 மில்லியன். 2023 ஆம் ஆண்டில் ரூபா.299 மில்லியன் பாதீடு ஓதுக்கப்பட்டிருந்தது, ஆனால் செலவு ரூபா. 133.81 மில்லியன் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாணப் பணிகள் தாமதமாகியுள்ள இந்த 08 திட்டங்களின் தற்போதைய முன்னேற்றமும் மெதுவாகவே காணப்படுவதால், திட்டத்தின் ஆரம்ப நோக்கங்களை நிறைவேற்றுவதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## 3.4 வருடாந்திர செயல்திறன் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28, திகதியிட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல. 2/2020 இன் பத்தி 10.2 இன் படி, அரச நிதித் துறையால் வழங்கப்பட்ட வழிகாட்டி இல.14 இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தின்படி வருடாந்திர செயல்திறன் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பில் பின்வருவனவற்றை அவதானிக்க முடியும்.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 28 ஆகஸ்ட் 2020 திகதியிட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இல.2/2020 இன் பத்தி 10.2 இன் படி, அரச நிதித் துறையால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இல.14 இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் நிதிநிலை அறிக்கைகளுடன் வருடாந்திர செயல்திறன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது செய்யப்படவில்லை. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பத்தி 12.1 இன் படி, நிதியாண்டின் முடிவில் இருந்து 150 நாட்களுக்கு முன் தாக்கல் செய்ய பரிந்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் வருடாந்திர செயல்திறன் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன்படி, செயல்திறன் அறிக்கை நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்கப்படவில்லை. | அரச நிதித்துறையின் வழிகாட்டுதலின்படி செயல்பட வேண்டும். |

### 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆண்டின் போது பொலிஸ் சாஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபல் உத்தியோகத்தர்களுக்காக 75,000 தொப்பிகள் ரூபா 93,455,119 இற்காக வழங்குவதற்கான பெறுகை செய்முறையின் போது தனது வழங்கலை இரத்துச் செய்ததற்கு எதிராக வழங்குனர் நடுவர் மன்றிற்கு சென்றிருந்தார். நடுவர் மன்றில் 2017 ஜனவரி 21 திகதி வழங்கியிருந்த தீர்ப்பின் படி 75,000 தொப்பிகளுக்கான பணம் மற்றும் அதற்கான ஏனைய கட்டணங்களை செலுத்துவதை இலங்கை பொலிஸினால் மறுதளித்து தொடர்ச்சியாக நீதிமன்றச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததுடன், வழங்குனரின் களஞ்சியக் கட்டணம் சட்டச் செலவுகள் மற்றும் செலாவணி விகிதாசார அதிகரித்தலின் நட்டத்தை இலங்கை பொலிஸினால் ஏற்றுக்கொள்ள வேண்டும் என வழங்குனர் வேண்டியிருந்தார். 2023 ஜனவரி 25 திகதி அளவில் ரூபா.219,357,715 தொகை செலுத்துவதற்கு நேரிடும் என இலங்கை பொலிஸினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுகை செய்முறையின் முறைசாரா தன்மை மற்றும் நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் இணக்கம் ஒன்றிற்கு வராமல் ஏற்பட்டிருந்த தாமதங்கள் காரணத்தினால் மேற்கொள்ள நேரிட்டிருந்த கிரயத்திற்காக பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாணிப உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு இணங்க இலங்கை பொலிஸினால் 60,000 தொப்பிகளுக்காக வழங்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய 414,000 அமெரிக்க டொலர்களின் 10 சதவீதமாகிய 41,400 அமெரிக்க டொலர்கள் 2022 மார்ச் 16 திகதி வெளிநாட்டு முகவர் நிலையத்திற்கு செலுத்தியிருந்ததுடன், மீதித் தொகையை செலுத்துவதற்காக நாணயப் பத்திரம் திறக்கப்பட்டுள்ளது எனவும், 2023 ஜூன் 06 திகதி இலங்கைக்கு பண்டங்கள் கிடைக்கவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்தப் பெறுகைகள் மற்றும் நடுவர் மன்ற செய்முறையின் குறைபாடுகள் காரணமாக அரசுக்கு மேற்கொள்ள நேரிட்டிருந்த மேலதிக செலவுகள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஹபராதுவ “நில செவன” திட்டத்தில் வீடொன்று ரூபா 3.8 மில்லியன் வீதம் 192 வீடுகள் ரூபா 729.6 மில்லியனிற்காக கொள்வனவு செய்வதற்காக 2017 திசெம்பர் 29 | 06.05.2024 அன்று, சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் இல./24/0834/640/012 மூலம் அமைச்சரவை ஒப்புதல் | உடன்படிக்கையின் படி வீடுகளை கையகப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதி உடன்படிக்கை ஒன்றுக்கு அணுகியிருந்தது. 2019 ஏப்ரல் 02 திகதி அளவில் ரூபா.500 மில்லியனிற்கான முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், இந்த உத்தியோகபூர்வ வாசஸ்தளத் தேவைப்பாடு மற்றும் கேள்விகள் தொடர்பாக சரியான ஆய்வொன்று மேற்கொள்ளாமல் கொள்வனவு செய்வதற்காக உடன்படிக்கை மேற்கொண்டிருந்தமையால். ஏப்ரல் 2024 இல் கூட, இந்த வீடுகளை கையகப்படுத்தும் பணி முடிவடையவில்லை. | அளித்துள்ளது. அதன்படி மேலும் பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பின்வரும் காணிகள் மற்றும் கட்டிடங்கள் 2017 ஆம் ஆண்டு இலங்கை பொலிஸாரால் சுவீகரிக்கப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை பூர்த்தி செய்யப்படவில்லை. | | |
| (i) பொலிஸ் கல்வி நிறுவகம் ஒன்று நிறுவுவதற்காக திட்டமிப்பட்ட 12 ஏக்கர் 01 ரூட் 08 பர்சஸ் அளவினை கொண்ட மல்வானையில் அமைந்துள்ள காணி | இந்த காணியை சுவீகரிப்பதற்காக கௌரவ சட்டமா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | காணியை உரித்தாக்கும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ii) பொலிஸ் குதிரைப் படைப் பிரிவுக்கு மற்றும் பொலிஸ் படைவீர் பாதுகாப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக திட்டமிட்டிருந்த 75 ஏக்கர் ஹொரண எல்லகந்த வத்த எனும் காணி | இந்த காணியை சுவீகரிப்பதற்காக பூர்வாங்க அளவீட்டை பெற்றுக்கொள்ளுமாறு நில அளவை அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. | நில சுவீகரிப்பு உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) இங்கிரிய உயர்பயிற்சி பொலிஸ் பயிற்சி கல்லூரி மற்றும் இங்கிரிய பொலிஸ் நிலையம் நிர்மாணிப்பதற்காக 2008 ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 8.8 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | 04 ஏக்கர், 02 ரூட் 07.2 பேர்ச்சஸ் கொண்ட இந்தக் காணி இங்கிரிய பிரதேச செயலாளரினால் 21.02.2024 அன்று இலங்கை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மானப்பணிகள் முடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் மாதம் ஒன்று ரூபா.3.3 மில்லியன் தொகை வீதம் ரூபா.333 மில்லியனுக்காக காலி வெகுனகொட ‘‘நில செவன’’ வீடமைப்புத் திட்டத்திலிருந்து கொள்வனவு செய்த 100 வீடுகளுக்காக சாட்டுதல் காணி உறுதிகள் 2024 மார்ச் மாதம் வரை பெற்றிருக்கவில்லை. | சாட்டுதல் காணி உறுதிகளை தயாரிப்பதற்கான திருத்தப்பட்ட ஒப்பந்தத்தை தயாரித்து சமர்ப்பிக்குமாறு 25.03.2024 அன்று சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | கொள்முதல் தொடர்பான சாட்டுதல் காணி உறுதிகளை உடனடியாகப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (ஈ) | தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள 05 பெரசவி கட்டிடங்களுடன் கூடிய சுமார் 6 ஏக்கர் நிலப்பரப்பானது, இலங்கை இராணுவத்தின் அதிகாரிகளுக்கு இடமளிக்க தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், சுமார் 05 வருடங்கள் கடந்துள்ளன. அந்த வளாகத்தின் தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களும் இலங்கை காவல்துறைக்கு சுமையாக மாறியிருந்தது.<br>அத்துடன் குறித்த காணியை இலங்கை பொலிஸாரின் பாவனைக்காக சுவீகரிக்க முடியாதுள்ளது. | தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் எதிர்கால பயிற்சி நடவடிக்கைகளுக்கு இந்த காணி பயன்படுத்தப்படவுள்ளதால், உடனடியாக மீட்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த காணி இலங்கை பொலிஸாரின் பாவனைக்காக உடனடியாக கையகப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | கட்டான தேசிய காவல் கல்லூரிக்கு குடியிருப்பு வசதிகளை வழங்குவதற்காக கட்டிடம் கட்டுவதற்கான விலைமனுக்கள் 2019 ஆகஸ்ட் 20, அன்று வழங்கப்பட்டன. திட்டத்தின் மெதுவான முன்னேற்றம் காரணமாக 2023 ஏப்ரல் 26, அன்று கட்டுமானம் நிறுத்தப்பட்டது. செய்யப்பட்ட பணியின் மதிப்பு ரூபா.97,290,003 மட்டுமே என ஆலோசனை நிறுவனம் முடிவு செய்துள்ளது. அதன்படி, ரூபா.42,252,164 மீட்கப்பட வேண்டும்.<br>கட்டிடத்தின் அஸ்திவாரம் மற்றும் கான்கிரீட் தட்டுகளில் (Slab) இருந்து வெளியேறிய நிலையிலுள்ள இரும்பு கம்பி துருப்பிடித்து அறிக்கப்பட்டு வருகிறது. பணியிடத்தில் இருந்த சுமார் ரூபா.1,744,875 மதிப்புள்ள கம்பிகள் துருப்பிடித்து அறிக்கப்பட்டு நிலையில் இருந்தது. | ஒப்பந்தத்தை ரத்து செய்யக்கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதால், பணியிடத்தில் உள்ள கட்டுமான பொருட்களை தொடர்பாக எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளது. | ஒப்பந்தத்தின் படி செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கட்டான தேசிய பொலிஸ் கல்லூரியில் முன்மொழியப்பட்ட கல்வி மற்றும் நிர்வாக கட்டிடத்தின் திருத்தப்பட்ட மொத்த செலவு ரூபா.224,616,490 ஆகும். விலைமனு 07 ஆகஸ்ட் 2018 அன்று வழங்கப்பட்டது. திட்டமிடல் பிழை காரணமாக, படிக்கட்டுகள் முழுமையாக இடிக்கப்பட்டதுடன் அதற்காக ரூபா.687,181 செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டது. இந்தச் சூழ்நிலை காரணமாக, திட்டத்தால் ஏற்படும் மேலதிக செலவுகள் மற்றும் தாமதங்களுக்கு பொறுப்பேற்கும் பிரிவினர் பற்றிய தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இதற்கான மேலதிக செலவை திட்டமிடல் பணியை மேற்கொண்ட ஆலோசனை நிறுவனத்திடம் இருந்து வசூலிக்க ஆலோசனை நிறுவனம் ஒப்புக்கொண்டதுடன், அந்த நிறுவனத்திடம் இருந்து வசூலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயல்திட்டம் சரியாக திட்டமிடப்பட்டு ஒப்பந்தத்துக்கமைய செயல்பட வேண்டும். |
| (எ) | பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் புதிய நிர்வாக கட்டிடத்தில் கேட்போர் கூடத்திற்கு ரூபா.6,547,992 செலவிடப்பட்டது. 2021 டிசம்பர் 23, அன்று ஒரு மொழிபெயர்ப்பு அமைப்பு வாங்கப்பட்டாலும், 2023 டிசம்பர் வரை, இந்த மொழி மொழிபெயர்ப்பு அமைப்பு பயன்படுத்தப்படாது உள்ளது. | புதிய நிர்வாகக் கட்டடத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் கட்டுமானப் பணிகள் முடிந்து இந்தப் பொருட்கள் நிறுவப்படும் வரை குறித்த பொருட்கள் பாதுகாப்புக்காக களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் எந்த நோக்கத்திற்காக வாங்கப்பட்டனவோ அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் சொத்துக்கள் செயலற்றதாக இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். |

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின்படி 15 காவல்துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் பின்னர் 25 பிப்ரவரி 2022 திகதியிட்ட உத்தரவின்படி தேசிய போலீஸ் கமிஷனுக்கு அவர்களின் மனைவிமார் செய்த கோரிக்கைகளின் பேரில் 2023 நவம்பர் க்குள் மூன்று காவல்துறை அதிகாரிகளின் வாழ்க்கைத் துணைக்கு மொத்தம் ரூபா.4,741,056 அரை மாதச் சம்பளமாக செலுத்தப்பட்டது. இந்த இரட்டைக் | இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணையில் தெரியவந்த உண்மைகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு பாதி சம்பளம் வழங்கப்பட்டதாகத் தகவல் மற்றும் இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் சரிபார்க்கப்பட்டு தெரிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நீதிமன்ற தீர்ப்புகள் வெளியாகும் வரை பணம் செலுத்தக்கூடாது. |

கொலை தொடர்பான விசாரணைகள், நீதித்துறை நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் மற்ற அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அரை மாதச் சம்பளம் மற்றும் விசாரணைகளின் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அறிக்கைகள் பற்றிய தகவல்களை கணக்காய்வுக்கு வெளிப்படுத்தவில்லை. இதனால், சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்ட அதிகாரிகளின் வாழ்க்கைத் துணைவர்களுக்கு நீண்டகாலமாக சம்பளம் வழங்கப்படுவது தவறான முன்னுதாரணமாக இருக்கக் கூடும் என்பதை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது.

### 3.8 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 25 மோட்டார் வாகனங்களின் வேக வரையறையை பரிசோதனை செய்யும் உபகரணங்கள் கடைசியாக 2016 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டன, மேலும் தற்போதுள்ள ஏராளமான சாதனங்கள் செயலற்ற நிலையில் இருந்தன. 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் 500 வேகமானிகள் கோரப்பட்ட போதிலும், அதில் ஒரு பகுதி கூட கொள்வனவு செய்யப்படவில்லை. இதன்படி, அதிவேகமாக வாகனங்களை செலுத்துவது வேக வரம்பை மீறி போக்குவரத்து விபத்துக்களுக்கு முக்கிய காரணமாகும், ஆனால் அதனை குறைக்க தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்ய இலங்கை பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. | இது தொடர்பாக முன்னுரிமை அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நோக்கங்களை அடைவதற்குத் தேவையான வசதிகளை பெற்றுக்கெள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொலிஸினால் நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படுகின்ற மற்றும் குற்றங்கள் மற்றும் தவறுகள் தொடர்பாக தொடர்ந்தும் நடாத்திச் செல்லப்படும் நீதிமன்ற அலுவல்கள் தொடர்பான தகவல்கள் தீர்ப்பு | இலங்கை பொலிஸினால் பயன்படுத்தப்படும் தகவல் முறைமைகளில் குற்றவியல் விசாரணைகள் மற்றும் நிருவாகம் தொடர்பாக முக்கியமாக 20 கணினி | நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைக் கொண்ட நாளதுவரையாக்கப்பட்ட தகவல் அமைப்பு பராமரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்ட வழக்குகள் தொடர்பான விபரங்கள் அடைத்து வைத்தல் அல்லது தள்ளுபடி செய்தல் வழக்குகள் அடங்கிய விபரங்களை கொண்ட நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல் முறைமை ஒன்றின் தேவைப்பாடு அவசியமாக இருப்பதுடன், இலங்கை பொலிஸின் செயலாற்றல் தொடர்பான மீளாய்வின் போது அவ்வாறான முறைமை ஒன்றின் தேவைப்பாட்டின் முக்கியத்துவமாக காணப்பட்ட போதிலும் அவ்வாறான முறைமை ஒன்று காணப்பட்டதை உறுதிப்படுத்த முடியவில்லை. | நிகழ்ச்சித் திட்டங்கள் காணப்படுவதுடன் ஒருங்கிணைந்த கணினி தகவல் அமைப்பை உருவாக்கிய பிறகு இலங்கை பொலிஸினால் நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படுகின்ற மற்றும் குற்றங்கள் மற்றும் தவறுகள் தொடர்பாக தொடர்ந்தும் நடாத்திச் செல்லப்படும் நீதிமன்ற அலுவல்கள் தொடர்பான தகவல்கள் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் தொடர்பான விபரங்கள் அடைத்து வைத்தல் அல்லது தள்ளுபடி செய்தல் வழக்குகள் அடங்கிய விபரங்களை கொண்ட நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல் முறைமை ஒன்று பராமரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. | |
| (இ) | கம்பஹா பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவரே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன் அவர் 2018 ஏப்ரல் 18, முதல் பணியிலிருந்து நிறுத்தப்பட்டார். இவ் அதிகாரிக்கு செப்டம்பர் 2018 முதல் ஜனவரி 2022 வரை அரை மாதச் சம்பளமாக ரூபா.3,251,000 வழங்கப்பட்டது.<br>அக்டோபர் 2022 இல், இந்த அதிகாரி சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டார் அரை மாதச் சம்பளத்தின் மதிப்பை திரும்பப் பெற முடியவில்லை. அரை மாத ஊதியம் வழங்குவதற்கான முடிவின் சரியான தன்மை குறித்தும் சிக்கல்கள் இருந்தன. | பணத்தை திரும்பச் செலுத்துவதாக இயக்குநர் சட்டப் பிரிவு இல. L3/B/04/2022/OW/11/94/2023 மற்றும் திகதி 04.10.2023 கடிதம் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. செலுத்தவில்லை என்றால் அதற்கான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் வரை கொடுப்பனவு செலுத்தப்படக்கூடாது. |
| (ஈ) | விஜபி பாதுகாப்பை வழங்குவது தொடர்பான காவல் கண்காணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை இல. 2687/2020 திகதியிட்ட செப்டம்பர் 30, 2020 மேலதிகமாக அமைச்சகத்தில் நடைபெறும் விஜபி பாதுகாப்பிற்காக அதிகாரிகளை நியமிக்கும் குழுவால் தற்போது உரிய தரத்தில் இல்லாத மற்றும் விஜபி பாதுகாப்பை | பொது பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற விஜபி பாதுகாப்புக்கான அதிகாரிகளை ஒதுக்கீடு செய்வதற்கான குழுவால் விஜபி மெய்க்காவலர்களை அனுப்புவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அந்த முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு | நடவடிக்கைகள் சுற்றறிக்கைகளின்படி செய்யப்படுவதுடன் செலவுகள் குறைந்த மற்றும் செயற்திறனான முறையில் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கக்கூடிய விஜபி அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரம்பிற்கு அப்பால் பல ஆண்டுகளாக விஜபி மெய்க்காவலர்கள் தொடர்ந்து நியமிக்கப்பட்ட சந்தர்பங்கள் உள்ள போதிலும், அதற்கான தற்போதைய சட்ட விதிகளை கணக்காய்வுக்கு வெளிப்படுத்தவில்லை. விஜபி பாதுகாப்பு பிரிவின் கீழ் உள்ள 09 பொலிஸ் பிரிவுகளுக்கு, 2022 ஜனவரி 01 இல் 3884 ஆக இருந்த அதிகாரிகளின் எண்ணிக்கை 2023 செப்டம்பர் 30 இல் 4,859 ஆக அதிகரிக்கப்பட்டது. விஜபி பாதுகாப்பு பிரிவின் 2018 – 2022 காலப்பகுதிக்கான வருடாந்த சராசரி செலவு ரூபா.4,342 மில்லியன் என்றாலும், 2023 ஆம் ஆண்டில், செலவு ரூபா.5,833 மில்லியனாக அதிகரித்துள்ளது. எனவே, மேற்படி சுற்றறிக்கைக்கு வெளியில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் (சிறப்பு கொடுப்பனவுகள் உட்பட) திருப்பிச் செலுத்த முடியாத செலவுகளாக இருப்பதை அவதானிக்க முடிந்தது. | நீக்கம் தொடர்பாக அவ்வப்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், விஜபி பாதுகாப்புக்கு அதிகாரிகளை நியமிக்கும் குழு முறையான அனுமதி இல்லாததால், பல ஆண்டுகளாக பல்வேறு நபர்களுக்கு தொடர்ந்து விஜபி காவலர்கள் நியமிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில், 2,458 அதிகாரிகளிடமிருந்து செலுத்த வேண்டிய நிலுவைகளின் தொகை ரூபா.60,874,303 ஆகும். அந்தக் கடன் நிலுவைகளில், 05 ஆண்டுகளில் 1,590 அதிகாரிகளின் கடன் நிலுவைத் தொகை ரூபா.41,743,898 ஆகும். | 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 5 ஆண்டுகளுக்கும் மேலான நிலுவைத் தொகையில் ரூபா.623,733 வசூலிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவையில் உள்ள கடன் தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டில் சமூக காவல்துறையால் நடத்தப்படும் 7,224 ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் 4,620 கூட்டங்கள்,<br>2023 ஆம் ஆண்டு நடைபெற உள்ள 6,020 கூட்டங்களில் 3,848 கூட்டங்கள் மட்டுமே நடைபெற்றன.<br>2022 ஆம் ஆண்டில் 12 தடவைகள் நடைப்பெற்ற காவல் நிலைய மட்ட சமூக காவல்துறை ஆலோசனைக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை 2023 இல் 10 ஆகக் | பொலீஸ் அதிகாரியின் சுற்றறிக்கை 2758/2023 என்ற பெயரில் புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது,<br>சமூகப் பொலிஸ் பிரிவுகளுக்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளை முழுநேரமாக அந்த நோக்கத்திற்காக ஈடுபடுத்த தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்<br>சமூக பொலிஸ் குழுக்களை | திட்டமிட்டபடி சமூக காவல் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைக்கப்பட்டாலும், கூட்டங்களின் பெறுபேறு முன்னேற்றமானது இரண்டு ஆண்டுகளிலும் 64 சதவீதமாக இருந்தது. | வலுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 7,224 மற்றும் 6,020 சமூக காவல்துறை உள்ளூர் பொது பாதுகாப்பு குழுக்கள் நடத்தப்பட வேண்டும். 4,523 மற்றும் 3,847 மட்டுமே நடைபெற்றது. 2022 ஆம் ஆண்டில் 12 தடவைகள் பொலிஸ் நிலைய மட்டத்தில் சமூகப் பொலிஸ் நிலையப் பொதுப் பாதுகாப்புக் குழுக்கள் நடைபெறவுள்ள போதிலும், கூட்டம் நடத்துவது தொடர்பான முன்னேற்றம் 63 சதவீதமாக இருந்தது. 2023 ஆம் ஆண்டில், கூட்டம் நடத்துவது 10 சந்தர்ப்பங்களாக குறைக்கப்பட்டது. அதன்படி, கூட்டம் நடத்துவது தொடர்பான முன்னேற்றம் சற்று அதிகரித்து 69 சதவீதமாக இருந்தது. | பொலிஸ் அதிகாரியின் சுற்றறிக்கை 2758/2023 என்ற பெயரில் புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது, சமூக பொலிஸ் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகளை முழு நேரமாக சேவையில் ஈடுபடுத்த தேவையான ஏற்பாடுகளை செய்து சமூக பொலிஸ் குழுக்களை பலப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | திட்டமிட்டபடி சமூக காவல் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | 1865 இன் 16 இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தை திருத்த வேண்டிய தேவை 2014 ஆண்டு இனங் காணப்பட்டிருந்தது. திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய 16 துறைகள் இனங்காணப்பட்டிருந்தது. தற்போதைய மற்றும் எதிர் கால சமூக மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கு பொருந்தக்கூடியவாறு நாளதுவரை ஆக்கப்பட்டு திருத்துவதற்காக 2014 நவம்பர் 19 திகதி அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்திருந்த போதிலும் 2024 ஏப்ரல் வரை, சட்டம் திருத்தப்படவில்லை. | பொலிஸாரின் அவதானிப்புகளைப் பெற்ற பின்னர் சட்ட வரைவாளர் இறுதி வரைவைத் தயாரித்துள்ளார். | 1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டம் அமைச்சரவை ஒப்புதலின்படி திருத்தப்பட வேண்டும். |
| (ஐ) | 2019 இன் 10 இலக்க மோட்டார் வாகன (திருத்திய) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த மோட்டார் வாகன குற்றங்கள் விளைவிக்கும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையின் படி தண்டப் பணம் அறவீடு செய்யும் முறை 2019 ஜூன் 20 திகதி முதல் செயற்பட்ட போதிலும், மோட்டார் வாகன குற்றங்கள் தொடர்பாக குற்றவாளிகள் ஒரே குற்றத்தை | அபராதம் தானியக்க முறையில் செலுத்துதல் மற்றும் பாதகமான மதிப்பெண் முறை நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, மோட்டார் குற்றங்களின் குற்றங்கள் விளைவிக்கும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையின் படி | 2019 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மோட்டார் வாகனங்கள் (திருத்தம்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மோட்டார் வாகன குற்றங்களின் குற்றங்கள் விளைவிக்கும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையின் படி |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளும் தவணைகளின் எண்ணிக்கை தெளிவாக இனங்காணக் கூடியவாறு தகவல் முறைமை ஒன்று இலங்கைப் பொலிஸ் செயற்படுத்தாமையால் ஒரே குற்றம் பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளும் குற்றவாளிகளிடம் சரியான தண்டப் பணம் அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | அபராதம் விதிக்கப்படும். | அபராதம் விதிக்கும் முறையை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகள் உடனடியாக செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | 2023 ஜூன் 22, அன்று பேலியகொட எழுதுபொருள் களஞ்சியசாலையில் செய்யப்பட்ட பௌதீக இருப்பு கணக்கெடுப்பில் 72 வகையான பொருட்கள் தொடர்பான 60082 அலகுகளின் குறைபாடும். 45 வகையான பொருட்கள் தொடர்பான 9846 அலகுகளின் அதிகரிப்பும் அடையாளம் காணப்பட்ட போதிலும், இதற்கு காரணமான தரப்பினர் அடையாளம் காணப்படவில்லை அல்லது மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்தத் திகதியில் இருக்கும் இறுப்பு நிலுவைகளை தொடக்க நிலுவைகளாக எடுத்துக் கொண்டு புதிய இறுப்பு புத்தகம் தொடங்கப்பட்டு பராமரிக்கப்பட்டது. | 27.03.2023 வரை களஞ்சியசாலையின் பொறுப்பாளராகப் பணியாற்றிய முகாமைத்துவ சேவை அதிகாரி டி. பி. என். பெர்னாண்டோ கைது செய்யப்பட்டமை தொடர்பில் 2023ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி ஆரம்பகட்ட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நல்ல சரக்கிறுப்பு கட்டுப்பாடு பராமரிக்கப்பட வேண்டும், பற்றாக்குறை அல்லது அதிகப்படியான இருப்புக்கு காரணமான தரப்பினரை கண்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 04. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலிஸ் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் கடமைகளின் தன்மை பற்றிய ஆய்வுக்குப் பிறகு, குறிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் இல்லாததால், அந்த பிரிவுகள் மற்றும் காவல் நிலையங்களில் வெற்றிடங்கள் உள்ளன. மேலதிகமாக இருக்கிறதா என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை. இந்நிலையில், உரிய முறைமையின்றி பணியாளர்கள் பணியமர்த்தல் | போலீஸ் பிரிவுகள், காவல் நிலையங்கள் மற்றும் அலுவலகங்களில் இருக்க வேண்டிய ஒவ்வொரு நிலையிலும் உள்ள அதிகாரிகளின் எண்ணிக்கையை தீர்மானிக்க மூத்த டிஐஜி தலைமையில் ஆய்வு மேலும் அபிவிருத்திப் பிரிவின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி குழுவின் | பொலிஸ் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் கடமையின் தன்மையை ஆய்வு செய்த பின்னர், குறிப்பாக அடையாளம் காணப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களை நியமிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு வந்தது. | அறிக்கையின் பிரகாரம் மேலதிக பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அனுமதிக்கப்பட்ட ஆண் போலீஸ் கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை 60,000 ஆக இருந்தபோதிலும், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் 30,909 என்ற உண்மையான எண்ணிக்கைக்கு எதிராக 29,091 வெற்றிடங்கள் உள்ளன. அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பதவி உயர்வுகளுக்கு ஒப்புதல் அளித்ததன் காரணமாக, காவல்துறை சார்ஜென்ட் பதவியில் 10,900 அதிகமாக இருப்பதுடன் அந்த எண்ணிக்கையுடன் கூடுதலாக 18,191 வெற்றிடங்கள் உள்ளன. இது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 30 சதவீதமாக இருந்ததுடன், இலங்கைப் பொலிஸாரின் அத்தியாவசிய பொதுச் சேவைகளை நிறைவேற்றுவதில் இது தடையாக இருந்தது. | 2024 ஆம் ஆண்டில் 5000 ஆட்சேர்ப்புக்காக 09.08.2023 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தின்படி 2024, 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் 3800 தொழிற்பயிற்சி அதிகாரிகளை நியமிக்க 29.02.2024 திகதியிட்ட கடிதம் இல. DMS/1184/Vol-VIII(T) மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஒப்புதலின்படி, 2024 ஆம் ஆண்டில் 500 பேரை பணியமர்த்துவதற்கான நேர்காணல் நடத்தப்படுகிறது. | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு உரிய வெற்றிடங்களை நிரப்பி பதவி உயர்வு வழங்க வேண்டும். |
| (இ) | அனுமதிக்கப்பட்ட பெண் போலீஸ் கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை 10,000 என்றாலும், மதிப்பாய்வாண்டின் இறுதியில், உண்மையில் 5,980 எண்ணிக்கையானக இருந்த போதிலும் 4020 காலியிடங்கள் இருந்தன, அனுமதித்த எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் 2019 மற்றும் 2020 இல் வழங்கப்பட்ட ஒப்புதல்கள் | 2024 ஆம் ஆண்டில் 5000 ஆட்சேர்ப்புக்காக 09.08.2023 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தின்படி 2024, 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் 3800 தொழிற்பயிற்சி அதிகாரிகளை நியமிக்க 29.02.2024 திகதியிட்ட கடிதம் இல. DMS/1184/Vol-VIII(T) மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன்படி, தொழிற்பயிற்சி அதிகாரிகளை நியமிக்க ஆள்சேர்ப்பு பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையான வெற்றிடங்களை நிரப்பி பதவி உயர்வு வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக பொலிஸ் சார்ஜன்ட் பதவியில் 645 பெண்கள் அதிகமாக உள்ளனர். அந்த எண்ணிக்கையைத் தாண்டி, மேலும் 3,375 மகளிர் போலீஸ் கான்ஸ்டபிள் பதவி வெற்றிடங்களாக உள்ளன. இது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 34 வீதமாக இருந்தமையினால், இலங்கை காவல்துறையின் அத்தியாவசிய பொதுச் சேவைகளை நிறைவேற்றுவதில் நேரடித் தடையாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அதற்கான பணிகளை செய்ய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இலங்கை காவல்துறையின் மருத்துவப் பிரிவில் ஊட்டச்சத்து நிபுணர் பதவியில் 2001 ஆம் ஆண்டு முதல் 23 ஆண்டுகள், அரச மருந்தாக்கள் கூட்டுத்தாபணத்தை சேர்ந்த ஒரு அதிகாரி இலங்கை காவல்துறை துணை சேவை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளார். அவரது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அரச மருந்தாக்கள் கூட்டுத்தாபணத்திற்கு திருப்பிச் செலுத்தப்பட்டன. எனினும் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க இலங்கை காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலைமையால் அரச மருந்தாக்கள் கூட்டுத்தாபணம் அன்றைய காலப்பகுதியில் இவ் அதிகாரியின் சேவையையும் இழந்துள்ளது மற்றொரு அதிகாரியை நியமிக்கும் வாய்ப்பும் பறிபோனது. | ஊட்டச்சத்து நிபுணரின் பதவி துணைச் சேவைத் தொழில்களில் சேர்க்கப்படவில்லை என்பதால், ஊட்டச்சத்து நிபுணர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். | ஊட்டச்சத்து நிபுணரின் பணியிடங்கள் தொடர்பான பணி நியமனத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 34 உள்ளூர் பொலிஸ் பிரிவுகள் கணக்காய்வுக்கு வழங்கிய தகவலின்படி, 08 முதல் 38 வருடங்கள் வரை நீண்ட காலமாக சம்பள உயர்வு செய்யப்படாத 507 அதிகாரிகள் உள்ளனர். ஆரம்ப படிநிலை அல்லது இரண்டு மூன்று அதிகரிப்புகளுக்கு மட்டுமே தகுதியுடையவர்கள் இந்த அதிகாரிகளின் ஏனைய ஊதிய உயர்வுகள் கிடைக்காமல் இருப்பதற்கு முன்னர் பணிபுரிந்த பொலிஸ் நிலையங்களில் இருந்து இது தெடர்பான விபரங்கள் கிடைக்காமையே முக்கிய காரணமாக அவதானிக்கப்பட்டது. இந்த நிலையில், இந்த உத்தியோகத்தர்களுக்கு அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பள உயர்வு மற்றும் கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை. பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் இழப்பு, ஓய்வு பெறுவதில் சிக்கல்கள் போன்ற சூழ்நிலைகள் இருந்தன. | ஒழுக்காற்று விசாரணைகள் இருப்பதாலும், சட்ட நடவடிக்கைகள் முடிவடையாததாலும், இந்த அதிகாரிகளில் சம்பள உயர்வு ஏற்பாடு செய்யப்படாத அதிகாரிகளும் உள்ளனர். நீண்ட நாட்களாக சம்பள உயர்வு வழங்கப்படாமல் உள்ள அதிகாரிகளின் விவரங்களைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சம்பள உயர்வுகள் தயாரிக்கப்படாத அலுவலர்கள் தொடர்பாக தொடர் கண்காணிப்பு செய்து, தாமதமான தவறுகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 8 முதல் 38 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்பட்ட காலக்கட்டத்தில், தொழிற்பயிற்சி கோப்பின் இழப்பு அல்லது தொழிற்பயிற்சி கோப்பினை முடிக்காததால் தொழிற்பயிற்சி நிலையில் உள்ள 88 போலீஸ் அதிகாரிகள் கண்காணிக்கப்பட்டனர். இந்த அதிகாரிகள் குறித்து நியமன அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக எந்த தகவலும் வெளியாகவில்லை.<br><br>காவல் நிலையங்களின் காவலில் உள்ள பயிற்சிக் | தொழிற்பயிற்சி அதிகாரிகளின் ஊதிய உயர்வுகளை நிர்ணயம் செய்வதில், பதவிக்கு தொடர்புடைய ஊதியப் படிநிலையில் நிறுவப்பட்ட மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டு பெற்ற முதல் சம்பள உயர்வையும், பதவி உறுதி செய்யப்பட்ட பின்னர் மீதி சம்பள உயர்வையும் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | நீண்ட காலமாக தொழிற்பயிற்சி நிலையில் இருக்கும் காவல்துறை அதிகாரிகள் விடயம் தொடர்பாக உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கோப்புகள் காணாமல் போனது குறித்து முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை.